[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 15

வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளின் பள்ளி இடைநிற்றலைக் குறைப்பதற்காக, சிறப்பு ஊக்கத் தொகையாக அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் தலா 5,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 313.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியருக்கு கல்வி கற்பிக்கும் முறையினை மேம்படுத்துவதற்காக, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை உகந்த முறையில் பயன்படுத்த பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. இணையவழி மூலமாகக் கற்கும் வகுப்பறைகள் (Virtual Classrooms) 770 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. 3,000 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 60 கோடி ரூபாய் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) அமைக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டில் 3,090 உயர்நிலைப் பள்ளிகளிலும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளிலும் 462.60 கோடி ரூபாய் செலவில் 10 முதல் 20 கணினிகளுடன் கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் உயர் தொழில்நுட்ப ஆய்வகம் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுவது உறுதிப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்குவதற்கு, 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 758 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan) மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்தின்' (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) கீழ், முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை முறையே 1,312.04 கோடி ரூபாய் மற்றும் 934.10 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்காத நிலையிலும், இத்திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து தொய்வின்றி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காகவும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காகவும், முறையே 1,750 கோடி ரூபாய் மற்றும் 850 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.